





தஞ்சை மாவட்டம், கும்பகோணத்தில் கலைஞர் கோட்டம்– கலைஞர் திருவுருவச்சிலை திறப்புவிழா நேற்று முன்தினம் சீரும் சிறப்புமாக நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், கலைஞர் கோட்டத்தை திறந்துவைத்து சிறப்புரையாற்றினார். இதில் அமைச்சர்கள் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, சிவ. வீ. மெய்யநாதன், மாவட்டக் கழகச் செயலாளர்கள் துரை.சந்திரசேகர், பூண்டி கலைவாணன், நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம், கலைஞரின் உதவியாளர் புலவர் முத்துவாவாசி, அரசுக் கொறடா கோவி.செழியன், சட்டமன்ற உறுப்பினர்கள் அன்பழகன், ஜவாஹிருல்லா, டி.கே.ஜி. நீலமேகம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ராமலிங்கம், மாநகரச் செயலாளர் சுப. தமிழழகன், தஞ்சை மேயர் சண்.இராமநாதன், ஒன்றியச் செயலாளர் கணேசன், துணை மேயர் அஞ்சுகம் பூபதி, இளைஞர் அணி துணைச் செயலாளர் இளையராஜா, குட்டி தட்சிணாமூர்த்தி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜி.கே.எம்.ராஜா, மாநகர அமைப்பாளர் வெங்கடேசன் மற்றும் கழக முன்னணியினர், இளைஞர் அணியினர் தொ.மு.ச அமைப்பைச் சேர்ந்தவர்கள் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.

## 2026 -சட்டமன்றத் தேர்தலில் தி.மு. கழகத்தை மீண்டும்

# தமிழ்நாட்டின் ஆட்சிக் கட்டிலில் அமர வைப்போம்!

## கும்பகோணம் கலைஞர் கோட்டம் திறப்பு விழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சூளுரை!

குடந்தை, செப். 28 –

**தஞ்சை மாவட்டம், கும்பகோணத்தில் கலைஞர் கோட்டம்– கலைஞர் திருவுருவச்சிலை திறப்பு விழா நேற்று முன்தினம் சீரும் சிறப்புமாக நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், கலைஞர் கோட்டத்தை திறந்துவைத்து சிறப்புரையாற்றினார்.**

**அப்போது அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:**

தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.கே என்று சு.கல்யாணசுந்தரம் அவர்களின் ஏற்பாட்டில் முத்தமிழறிஞர் கலைஞரின் உதவியாளர் முத்துவாசி அவர்களின் ஒருங்கிணைப்பில் அமைச்சர் அண்ணன் எ.வ.வேலு அவர்களின் உதவியுடன் அமைக்கப்பட்டுள்ள நூலகத்துடன் கூடிய இந்தக் கலைஞர் கோட்டத்தையும் கலைஞரின் திருவுருவச்சிலையையும் இந்த கும்பகோணம் மாநகரில் திறந்து வைப்பதில் மிகுந்த பெருமை அடைகிறேன். மகிழ்ச்சி அடைகிறேன்.

கழகத்தின் பவள விழா ஆண்டு நிறைவில் திறக்கப்படுகின்ற கலைஞர் அவர்களின் முதல் சிலையாக இத்திருவுருவச்சிலையை, இங்கு திறந்து வைத்திருக்கிறோம்.

### கலைஞர் கோட்டம்

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், சென்னையில் `வள்ளுவர் கோட்டம்', கன்னியாகுமரியில் `குமரிக் கோட்டம்' அமைத்தார்கள். அப்படிப்பட்ட நம் கலைஞர் அவர்களின் நூற்றாண்டில் கலைஞர் பிறந்த திருவாரூரில், நம் முதலமைச்சர் அவர்கள் `கலைஞர் கோட்டத்தை' முதன்முறையாக அமைத்தார்கள்.

இன்று மாவட்டப் பொறுப்பு அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி மற்றும் மாவட்டக் கழகச் செயலாளர் கல்யாணசுந்தரம் இணைந்து, கும்பகோணத்திலும், கலைஞர் கோட்டத்தைக் கட்டி எழுப்பி இருக்கிறார்கள்.

கலைஞர் அவர்களின் நூற்றாண்டினை முன்னிட்டு, தமிழ்நாட்டில் உள்ள 234 தொகுதிகளிலும், கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையைத் திறக்க வேண்டும் என்று, நம் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் உத்தரவிட்டார். அந்த வகையில் இன்றைய தினம் கலைஞர் அவர்களுக்கு நெருக்கமான இந்த கும்பகோண மண்ணில் கலைஞருடைய கோட்டத்துடன் அவருடைய திருவுருவச் சிலையை நான் திறந்து வைக்கின்ற அந்த பெருமையை அடைந்திருக்கின்றேன்.

### திருவுருவச்சிலை

மாங்குடியின் முதல் கிளைச் செயலாளராக இருந்து கழகத்தை வளர்த்தெடுத்த – இந்தி ஒழிப்புப் போராளி இரத்தினம் அவர்களுக்கு, கலைஞர் அவர்களின் சிறப்பு உதவியாளராகச் செயல்பட்ட முத்துவாவாசி அவர்களின் முயற்சியால், இங்கே அருகாமையில் திருவுருவச்சிலையைத் திறந்து வைத்திருக்கிறோம்.

தலைவர்களுக்கு மட்டும் சிலை எழுப்பப்படவில்லை. அடிமட்டத் தொண்டன், கிளைக்கழகச் செயலாளருக்குக்கூட சிலை திறந்து வைத்து, அவர்களின் பணியைப் போற்றுகின்ற ஒரே இயக்கம் நம் திராவிட முன்னேற்றக் கழகம் மட்டும்தான் என்பதைக் கூறிக்கொள்வதில் பெருமை அடைகிறேன்.

கிளைக் கழகச் செயலாளருக்கும் சிலை திறக்கலாம் என்று எல்லோருக்கும் முன்மாதிரியாக திகழ்கின்ற தஞ்சை வடக்கு மாவட்ட கழகத்திற்கு என்னுடைய வாழ்த்துக்களையும் பாராட்டையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்

### கும்பகோணம் மண்

இந்தக் கும்பகோணம் மண்தான் நம் கழகத்தின் முதல் அவைத்தலைவர் அண்ணன் கே.கே. நீலமேகத்தைத் தந்த மண். `சோழ மண்டலத் தளபதி' என்றும் `சின்னக்கலைஞர்' என்றும் தஞ்சை மக்களால் கொண்டாடப்பட்ட அண்ணன் கோ.சி.மணி அவர்களை தந்த மண், இந்த கும்பகோணம் மண்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கும் கும்பகோணத்துக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இங்கே பக்கத்தில் இருக்கின்ற திருவாரூரில்தான் கலைஞர் அவர்கள் பிறந்து வளர்ந்தார்கள். ஆகவே, இளம் வயதிலேயே கும்பகோணத்துக்கு கலைஞர் அவர்கள் அடிக்கடி வருகை தந்து தனது எழுத்துப்பணி, அரசியல்பணியை இந்த மண்ணில்தான் தொடங்கினார்கள்.

குடந்தை கே.கே.நீலமேகம் அவர்களை, 'குடந்தைப் பெரியவர்' என்றுதான் கலைஞர் அவர்கள், அன்போடு அழைத்து வந்தார்கள். இந்தித் திணிப்பைக் கண்டித்து, தஞ்சையில் இராஜாஜிக்கு எதிராக, கருப்புக் கொடி காட்டவேண்டும் என்று கலைஞர் அவர்கள், அண்ணாவிடம் சொன்னார்கள்.

அதற்கு, மாவட்டச் செயலாளர் கே.கே.நீலமேகம் அவர்களிடம், ஒருவார்த்தை சொல்லிவிட்டு செய், என்று அண்ணா கூறினார். தி.மு.கழகம், அப்போதுதான், தொடங்கப்பட்ட சமயம். தஞ்சை, கும்பகோணம் பகுதிகளைப் பொறுத்தவரை, திராவிடர் கழகம், ஆழமாக வேரூன்றிய பகுதிகள்.

### கருப்புக்கொடி போராட்டம்

எனவே, கருப்புக் கொடிப் போராட்டத்தை, வெற்றிகரமாக நடத்த முடியுமா, என கே.கே.நீலமேகம், ஒரு நிமிடம் யோசித்தார். பிறகு கலைஞர் அவர்களை வைத்து, 26 நாட்களுக்கு பல்வேறு கூட்டங்களை, மாவட்டம் முழுக்க நடத்தினார். அந்தக் கூட்டங்கள் மூலம்தான், கருப்புக்கொடி போராட்டத்தின் அவசியம், தமிழ்நாடு முழுவதும் உள்ள மக்களுக்குத் தெரிந்தது.பின்பு, இந்தித் திணிப்புக்கு எதிரான கருப்புக்கொடி போராட்டம், வெற்றிகரமாக நடத்தப்பட்டது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், இன்றைக்கும் நம்மையெல்லாம்உணர்வாக- கொள்கையாக-செயலாக-வழிநடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

போட்டியிட்ட அனைத்துத் தேர்தல்களிலும், வெற்றியை மட்டுமே பெற்ற தலைவர், நம் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். நம் கலைஞர் அவர்களின் திருவுருவச்சிலைகளை, திறந்து வைக்கின்றோம், என்றால், கலைஞர் அவர்களின், கொள்கைகளை, லட்சியங்களை, முழக்கங்களை, தமிழ்நாடு முழுவதும், கொண்டு சேர்க்கிறோம், என்றுதான் அர்த்தம்.



### 100 சதவிகித வெற்றி

இன்றைக்கு கலைஞர் அவர்களின் வழியில், நம் முதலமைச்சர் அவர்கள் கழகத்தை வலிமையோடும் - வெற்றிகளோடும், வழிநடத்திச் செல்கிறார்கள். அதற்கு ஒரு சிறந்த உதாரணம்தான், நடைபெற்று முடிந்த மக்களவைத் தேர்தலில் தமிழ்நாட்டு மக்கள், நமக்கு 40-க்கு 40 தொகுதிகளிலும் 100 சதவிகித வெற்றியை நம் முதலமைச்சர் அவர்களுக்கு கொடுத்தார்கள்.

இந்த மயிலாடுதுறை மக்களவைத் தொகுதியில் கூட, நம் கூட்டணிக் கட்சியான காங்கிரஸ் பேரியக்கம், கிட்டத்தட்ட 3 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில், மிகப்பெரிய வெற்றியைப் பெற்றது. அதற்கும் இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### மாபெரும் தலைவர்

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், முக்கால் நூற்றாண்டு காலம் தமிழ்நாட்டு அரசியலை இயக்கினார்கள். இந்திய அரசியலையும் தீர்மானித்த, மாபெரும் தலைவர்தான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

கலைஞர் அவர்கள் வழியில், இன்றைக்கு இந்திய அரசியலிலும், நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தவிர்க்கமுடியாத ஆளுமையாக, திகழ்ந்து வருகிறார்.

இன்றைக்கு, இந்தியா, இந்தியாவாக இருப்பதற்கு, நம் தலைவர் அவர்கள் முன்னின்று உருவாக்கிய, இந்தியா கூட்டணிதான் காரணம். இன்றைக்கு இந்தியாவுக்கே வழிகாட்டுகின்ற திட்டங்களை, நம் முதலமைச்சர் அவர்கள், தந்து கொண்டிருக்கிறார்கள்.

மகளிருக்கான விடியல் பயணத் திட்டம். புதுமைப்பெண் திட்டம். தமிழ்ப்புதல்வன் திட்டம். முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம். கிட்டத்தட்ட 1 கோடியே 16 லட்சம் மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை வழங்கிக் கொண்டு இருக்கிறார்.

### மகளிர் உரிமைத்தொகைத் திட்டம்

ஒரு சில இடங்களில் கோரிக்கைகள் வந்து கொண்டிருக்கிறது. நான் உறுதி அளிக்கிறேன். கண்டிப்பாக தகுதியுள்ள அனைத்து மகளிருக்கும் கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டம் விரைவில் கிடைக்கும் என்று கூறிக்கொள்கிறேன்.

இந்தத் திட்டங்களை எல்லாம், நீங்கள் அனைவரும் மக்களிடம் எடுத்துச் சொல்லுங்கள். இந்தத் திட்டத்தின் தூதுவர்களாக, எப்படி நம் முதலமைச்சர் நம் கழகத்துக்கு பிராண்ட் அம்பாசிடரோ, அதே போல் இந்த அரசிற்கு பிராண்ட் அம்பாசிடர்ஸ் ஆக, நீங்கள் ஒவ்வொருவரும் திகழ வேண்டும்.

இன்னும் ஒன்றரை வருடத்தில் சட்டமன்றத் தேர்தல் வரப்போகிறது. அதற்கு நாம் இப்போதே தயாராக வேண்டும். இந்தத் தேர்தலில், மாபெரும் வெற்றியைப் பெறும், என்று நம் தலைவர் அவர்கள், கழக முப்பெரும் விழாவில் பேசினார்.

### கழக உடன்பிறப்புகள்

அப்போது சொன்னார் ``அதீத நம்பிக்கையாலே, நான் அப்படிச் சொல்லவில்லை. கழக உடன்பிறப்புகள், நீங்கள் இருக்கின்ற நம்பிக்கையில்தான் சொன்னேன்" என்றும் சொன்னார். ஆகவே, நாம் அனைவரும் இப்போதிருந்தே சட்டமன்றத் தேர்தலுக்காக உழைப்போம். கழக ஆட்சியை மீண்டும் அமைக்க, நம் முதலமைச்சர் அவர்கள் மீண்டும் முதலமைச்சராக அமர வேண்டும், என்ற ஒரே நோக்கத்தோடு இந்தக் கும்பகோணம் கலைஞர் கோட்டத்தில் இருந்து உறுதி ஏற்போம். கலைஞர் கோட்டத்தைப் பார்த்து பார்த்து உருவாக்கிய மாவட்டக்கழகச் செயலாளர் அண்ணன் எஸ்.கே அவர்களுக்கு என் வாழ்த்துகள், பாராட்டுகள், நன்றிகள்.

### கழகத்திற்காக ஆற்றிய பணிகள்

அண்ணன் எஸ்.கே அவர்கள் கழகத்திற்காக ஆற்றிய பணிகளை அங்கீகரிக்கின்ற வகையில், நம் தலைவர் அவர்கள் அவரை மாநிலங்களவை உறுப்பினராக ஆக்கினார். அவர் அந்தப் பொறுப்பை ஏற்றபோது கழகத்தில் உள்ள அனைத்து உடன் பிறப்புகளும் மகிழ்ந்தார்கள். இந்த மாவட்டத்தில் மட்டுமல்ல தமிழ்நாட்டில் உள்ள அனைத்து உடன் பிறப்புகளும் அதை மகிழ்ந்து பாராட்டினார்கள், வாழ்த்தினார்கள்.

ஏனென்றால், நம் தலைவர் அவர்கள் சரியான நபரை கண்டறிந்து சரியான நேரத்தில், சரியான பொறுப்பை வழங்கி இருக்கிறார். இதுதான் நம் தலைவர் அவர்களின் சிறப்பு என்று அனைவரும் பாராட்டினார்கள்.

அப்படிப்பட்ட அண்ணன் எஸ்.கே. அவர்களுக்கு பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்து, அமைச்சர்கள் மெய்யநாதன், அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள், வந்திருக்கின்ற அனைத்து மாவட்டக் கழக நிர்வாகிகளுக்கும் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்து, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, சிவ.வீ. மெய்யநாதன், மாவட்டக் கழகச் செயலாளர்கள் துரை.சந்திரசேகர், பூண்டி கலைவாணன், நாடாளுமன்ற உறுப்பினர் மு. சண்முகம், கலைஞரின் உதவியாளர் புலவர் முத்துவாவாசி, அரசுக் கொறடா கோவி.செழியன், சட்டமன்ற உறுப்பினர்கள் அன்பழகன், ஜவாஹிருல்லா, டி.கே.ஜி. நீலமேகம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ராமலிங்கம், மாநகரச் செயலாளர் தமிழழகன், தஞ்சை மேயர் சண்.இராமநாதன், ஒன்றியச் செயலாளர் கணேசன், துணை மேயர் அஞ்சுகம் பூபதி, இளைஞரணி மாநிலத் துணைச் செயலாளர் இளையராஜா, குட்டி தட்சிணமூர்த்தி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜி.கே.எம்.ராஜா, மாநகர அமைப்பாளர் வெங்கடேசன் மற்றும் கழக முன்னணியினர், இளைஞர் அணியினர் தொ.மு.ச அமைப்பைச் சேர்ந்தவர்கள் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.



கடலூர் மாவட்ட மத்திய கூட்டுறவு சங்கத்தின் சார்பில் 33வது கிளையை கருவேப்பிலங்குறிச்சியில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ. கணேசன் முன்னிலையில் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் திறந்து வைத்து பயனாளர்களுக்கு வங்கி கடன் வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் கடலூர் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.விஷ்ணு பிரசாத், நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா.இராசேந்திரன், விருத்தாசலம் சட்டமன்ற உறுப்பினர் எம்.ஆர். இராதாகிருஷ்ணன் , மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட கூட்டுறவு இணை பதிவாளர் மற்றும் துறை சார்ந்த அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மதுரவாயல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அரசு மேல் நிலைப் பள்ளிகளில் பயிலும் 11ஆம் வகுப்பு மாணவ – மாணவிகளுக்கு போரூர் அரசு மகளிர் மேல் நிலைப் பள்ளியில் 1480 விலையில்லா மிதிவண்டி, சென்ற ஆண்டு 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் முதல் மூன்று மதிப்பெண்களைப் பெற்ற மாணவ, மாணவியருக்கு பண முடிப்பு, கேடயம் (ம) பதக்கங்களை அமைச்சர் மா.சுப்பிரமணியன், காரம்பாக்கம் க.கணபதி, ஆகியோர் வழங்கினர். இதில் கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள், ஆசிரியர்கள் பங்கேற்றனர்.